# விடை தேடும் வினாக்கள்

## மண்டோதரி என்னும் மாண்புறு நங்கை

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 6. மண்டோதரி என்னும் மாண்புறு நங்கை

தமிழ்க் கவிஞர்கள் பெண்மையைப் பெரிதும் போற்றும் இயல்பினர். இவ்வியல்பு சமூகத் தாக்கத்தால் விளைந்தது. சமூகம் பெண்மையைப் போற்றாதிருந்தால், கவிதைகளில் அது வெளிப்பட்டிருக்கும். தொல்காப்பியர் காலம் முதல் பாரதி காலம் வரை தமிழ் இலக்கியச் சித்திரிப்புகளில் பெண்மை ஏற்றம் பெற்றே சிறந்திலங்குகின்றது.

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப''

என்ற தொல்காப்பிய நூற்பா, பெண்மையின் பெருமிதக் குணங்களைப் பதிவு செய்து காட்டுகின்றது. மணம் செய்து கொள்ளப்போகும் ஆடவனுக்கும், பெண்ணுக்கும் பத்துவகை ஒப்புமை வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். அவற்றுள் ''அறிவு'' ஒப்பும் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

திருவள்ளுவர் பெண்மைக்குப் பேரிடம் தருகிறார். ஆடவனின் இல்லறத் துணையாகும் பெண், அவரால் பெரிதெடுத்துப் பாராட்டப் பெறுகிறாள். வாழ்வு என்னும் கடலைத் தனித்துக் கடக்க இயலாத ஆண் மகனுக்கு அவள் துணை என்கிறார். கணவன் குடும்பப் பெருமையை, அவளே காக்க

www.saivamonline.com

வல்லவள் என்பதைச் ''சொற்காத்து'' என்று சுட்டிச்செல்கிறார். அவள் மட்டும் நன்கு அமைந்து விட்டால் ஆடவன் வாழ்க்கையில் எல்லாம் நிறையும் என்பார்,

''இல்லதென், இல்லவள் மாண்பானால்''

என்று பேசி ஏற்றம் காட்டுவார். நிறைவாகப்

''பெண்ணின் பெருந்தக்க யாவுள?''

என்று வினாத் தொடுத்து அணி சேர்ப்பார்.

பலதார மணத்தை வள்ளுவர் ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை. அது காலத்தின் தாக்கம் ஆகலாம். ஆனால், ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்ட பெண்ணை, ஏறெடுத்துப் பார்க்கும் ஆண்மையை அவர் கடுமையாகச் சாடுகிறார். ஆண்மையிற் சிறந்த ஆண்மை மாற்றான் மனைவியை ஏறெடுத்துப் பார்க்காத மனப் பண்பில் மிளிர்வதை,

---

**திருவள்ளுவர் பெண்மைக்குப் பேரிடம் தருகிறார். ஆடவனின் இல்லறத் துணையாகும் பெண், அவரால் பெரிதெடுத்துப் பாராட்டப் பெறுகிறாள். வாழ்வு என்னும் கடலைத் தனித்துக் கடக்க இயலாத ஆண்மகனுக்கு, அவள் துணை என்கிறார். கணவன் குடும்பப் பெருமையை அவளே காக்க வல்லவள் என்பதைச் ''சொற்காத்து'' என்று சுட்டிச் செல்கிறார்.**

---

''பிறன்மனை நோக்காத பேராண்மை''

என்று புத்திலக்கணம் படைப்பார். மணம் கொள்ளாது பெண் பொது மகளாக வாழ்வதை வள்ளுவர் கடுமையாகச் சாடுவார். பொது மகளிர் உருவாதல் ஒழுக்கமற்ற ஆடவர்களால்தாம் என்பது அவர் கணிப்பு. பெண்ணை விலை மாதாகக் கருதும் சமூகம் ''நோயுடையது'' என்பார். பொது மகளிரை ''வரைவின் மகளிர்'' என்று இனங்காட்டி, சமூகம் அவ்வாறான வாழ்விலிருந்து பெண்ணை விடுவிக்க வேண்டும் என்று குறித்துரைப்பார்.



www.saivamonline.com

''மனைவி'' என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டு சமூக அறங்களைச் செய்யத் தவறும் ஆடவனைக் கண்டித்தே வள்ளுவரின் பெண்வழிச் சேரல் அமைந்தது.

கற்பனை கலந்த சங்க அக இலக்கியங்களில், பெண்மையின் பெருமிதங்கள் தலைவி, தோழி, செவிலி என்ற பாத்திரங்களால் நிலைநாட்டப்படுகின்றன. அறத்தொடு நிற்றலிலும், உடன்போக்கிலும், வரைவு கடாதலிலும் பெண்மையின் அறிவுத் திறம் ஒளிவீசக் காண்கிறோம்.

புற இலக்கியங்களில், பாடும் குயில்களாகப் பெண் பாற் புலவர்கள் வலம் வருகின்றனர். குலப் பெருமையும் மான வீரமும் மிக்க மற மகளிர்கள் அங்கே தீட்டப்பட்டுள்ளனர்.

---

**பலதார மணத்தை வள்ளுவர் ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை. அது காலத்தின் தாக்கம் ஆகலாம். ஆனால், ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்ட பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கும் ஆண்மையை அவர் கடுமையாகச் சாடுகிறார்.**

---

தமிழின் முதற் காப்பியம் ஒரு பெண்ணிடமிருந்து, அது கூடச் சரியில்லை, அவள் காற் சிலம்பிலிருந்து பிறக்கிறது. ஒரு குலமகள் தெய்வமாகிறாள்; ஒரு அறியாப்பெண் ஆர்ப்பரித்து எழுகிறாள்; அறிவார்ந்த வாதத்தால் நீதி கேட்டு நிமிர்ந்து நிற்கிறாள்; தெய்வம் எனக் கைகூப்பப் பெறுகிறாள். கணிகை குலமாதவி கற்பரசியாகிறாள்; கண்ணகியோடு ஒப்ப எண்ணமிடப்படுகிறாள்; அவள் மகள் அறச்செல்வியாகி அகிலம் காக்கிறாள்.

''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்''

என அரசமாதேவி ஆவி துறக்கிறாள்.

''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே''

என ஞானசம்பந்தர் நயமுறப் பேசுகிறார்.



www.saivamonline.com

''பேயார்க்கும் அடியேன்''

என்று, சுந்தரர் அம்மையாரை ''ஆர்'', விகுதி தந்து வணங்குகின்றார். ''அள்'', ''ஆள்'' என்ற விகுதியே பெய்யாமல், பெண்மைத் தொண்டர்களை முடிக்கும் போதெல்லாம், ''ஆர்'' என்னும் உயர்திணைப் பலர் பால் விகுதியே தந்து சேக்கிழார் பெண்மையைச் சிறப்பிக்கிறார். தீமையுடைய பெண்பாற் பாத்திரம் ஒன்று கூட இல்லாது கதை நடத்திச் சேக்கிழார் கருத்துள் நிறைகிறார்.

பிறமொழிக் காப்பியம் தமிழுக்கு வந்தபோது, அவற்றைத் தமிழில் தரவந்த தமிழ்க் கவிஞர்களுக்குப் பெண்மை பற்றிய இந்தச் சித்தாந்தம் அரணாய் நிற்கிறது. இராமகாதையும்,

---

**தமிழின் முதற் காப்பியம் ஒரு பெண்ணிடமிருந்து, அதுகூடச் சரியில்லை; அவள் காற்சிலம்பிலிருந்து பிறக்கிறது. ஒரு குலமகள் தெய்வமாகிறாள்; ஒரு அறியாப்பெண் ஆர்ப்பரித்து எழுகிறாள்; அறிவார்ந்த வாதத்தால் நீதி கேட்டு நிமிர்ந்து நிற்கிறாள்; தெய்வம் எனக் கை கூப்பப் பெறுகிறாள். கணிகை குலமாதவி கற்பரசியாகிறாள். கண்ணகியோடு ஒப்ப எண்ணமிடப்படுகிறாள், அவள் மகள் அறச் செல்வியாகி அகிலம் காக்கிறாள்.**

---

பாரதமும், பெருங்கதையும், சிந்தாமணியும் தமிழில் எழுந்தபோது பெண்மை பற்றிய சிந்திரிப்புக்களில், கவிஞர்கள் மண்ணின் மரபைப் போற்ற வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டனர். காவியப் போக்கில் முரண்பாடுடைய முறை தவறிய மற்றும் சீர்மை திறம்பிய மகளிர்கள் மூலக் கதைகளில் வருகின்றனர். அவர்களைத் தமிழ்ப்படுத்தும்போது தமிழ் இலக்கிய ஆடவர்சால்பும், மகளிர் திறமும், மாசுபடாவண்ணம் அவர்களைப் படைக்கத் தமிழ்க் கவிஞர்கள் உறுதி பூண வேண்டியுள்ளது. தீய மகளிர்கள் கூட நல்லவர்களாக, இயன்றவரை உயர்ந்தவர்களாகப்



www.saivamonline.com

படைத்துக் காட்டப்படுவதற்கு இந்த மண்ணின், கவிஞர்கள் போற்றிய மரபே பாதுகாவல் செய்கிறது.

வான்மிகத்துச் சூர்ப்பணகையும், தாரையும், உருமையும், கைகேயியும், மண்டோதரியும் கம்பனின் கைவண்ணத்தில் எவ்வளவு உயர்ந்துள்ளனர், அல்லது உயர்த்தப்பட்டுள்ளனர் என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பவரே உணர இயலும், கவிஞனின் தனிமனிதப் பண்பாடும் இணையும் போது இச்சித்திரிப்புக்கள் மேலும் அழகாகின்றன.

தீமையையே தீமை களைந்து நன்மையாகச் சித்திரிக்கவல்ல பண்பாடுமிக்க தமிழ்க் கவிஞர்கள் கையில், ஒரு நன்மை கிடைத்துவிட்டால், அதை அவர்கள் எந்த அளவுக்கு ஒளியூட்டுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு ஒரு சான்றாகத் திகழ்கிறாள் மயன் மகள் மண்டோதரி.

---

**"அள்", ஆள்" என்ற விகுதியே பெய்யாமல், பெண்மைத் தொண்டர்களை முடிக்கும் போதெல்லாம், "ஆர்" என்றும் உயர்திணைப் பலர்பால் விகுதியே தந்து சேக்கிழார் பெண்மையைச் சிறப்பிக்கிறார். தீமையுடைய பெண்பாற் பாத்திரம் ஒன்று கூட இல்லாது கதை நடத்திச் சேக்கிழார் கருத்துள் நிறைகிறார்.**

---

கவிஞன் ஒரு தாய் போன்றவன். தேறும் என்று அவள் எதிர்பார்த்த பிள்ளை, தேறிவிட்டால் அவள் மகிழ்வதை விட, தேறாது என்று நினைத்த பிள்ளை தேறும்போது அவள் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. தீமையின் ஊடே நன்மையையும், மறத்தின் ஊடே அறத்தினையும் காணும் போது மகிழ்வது மானுட இயல்பு. கவிஞன் மானுடத்திற்கும் மேம்பட்டவன். அதனைப் பாடிப் படைத்துச் சாகாவரம் தருபவன்.

இருள் சூழ்ந்த இலங்கையில் வீடணனும், திரிசடையும், மண்டோதரியும் கண்ணில் படும்போது, அவன் கவிதை உள்ளம் கர்வம் கொள்ளுகிறது. கம்பனின் கைவண்ணத்தில், இராவணன்



www.saivamonline.com

மனைவி மண்டோதரி மறக்கவொண்ணாக் கற்பரசியாகக் கவினார் நங்கையாகப் பேருருக்கொள்கிறாள்.

சீதையின் விடுதலை கண்டு மகிழ வேண்டிய நம்மை, மண்டோதரி மாங்கல்யம் இழந்ததற்காகக் கலங்க வைக்கக் கம்பனால் முடிகிறது. இராவணன் வீழ்ச்சியால் நிறையவேண்டிய மனம், மண்டோதரி துயரத்தில் பங்கேற்கத் துடிதுடிக்கிறது. ''இவனுக்கு இது வேண்டும்'' என்று உள்ளம் துள்ளும்போது, ''இவளுக்கா இத்துயரம்'' என நெஞ்சம் அஞ்ச வைக்கிறான் கவிச்சக்ரவர்த்திக் கம்பன். தீயவன் துணைவி, உத்தமன் துணைவி சீதைக்கு நிகராக உருவாகும் போது, நெஞ்சம் அவளை ஏற்கவே செய்கிறது; நெகிழ்ந்த கண்கள் குளமாக ஆகின்றன.

---

**தீமையையே தீமை களைந்து நன்மையாகச் சித்திரிக்கவல்ல பண்பாடு மிக்க தமிழ்க் கவிஞர்கள் கையில் ஒரு நன்மை கிடைத்துவிட்டால், அதை அவர்கள் எந்தளவுக்கு ஒளியூட்டுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு ஒரு சான்றாகத் திகழ்கிறாள் மயன் மகள் மண்டோதரி.**

---

ஆறு காண்டத்துக் கம்பனில், அவளை ஐந்தாவது காண்டத்து இடையில்தான், ஆஞ்சநேயன் கண்வழி முதன்முதலாகக் காணுகிறோம். சிற்றுருக்கொண்டு சீதையைத் தேடி வருகிறான் அனுமன். நெடுநேரத்தேட்டத்திற்குப்பின், வித்தியாதரமாதர் வீதியைக் கடந்து வரும்போது மண்டோதரி மாளிகை அவன் கண்ணில்படுகிறது. கம்பன் அவள் உறையும் அழகையும் உரைக்கின்றான்.

''கண்டனன், நளிர்திங்கள் மாய நந்திய வாள்முகத்து
ஒரு தனி மயன் மகள் உறை மாடம்''

என்கின்றான். சந்திரமண்டலத்துக்கு மேலாகக் காண்பார்க்கு மகிழ்ச்சியை விளைத்து விளங்கும் முக அழகுடையாளாம் மண்டோதரி. அசுரத்தச்சனாகிய மயன் மகள், அழகிலும் சிறந்தவள். அவள், அகலிகை, திரௌபதி, சீதை, தாரை என்பாரோடு, ஒருங்கு



www.saivamonline.com

வைத்து எண்ணப்படும் பஞ்சகன்னியருள் ஒருத்தி. கண்ட மனைகளுக்கெல்லாம் மேம்பட்ட மனை இது என்றுணர்ந்த அனுமன், சீதை சிறை வைக்கப்பட்ட மாடம் இதுவே என எண்ணுகிறான். உள் நுழைகிறான். சீதையோ என ஐயுற்று, அவன் காணும் மண்டோதரி உறங்கிக் கிடக்கும் நிலையை, மூன்று கவிதைகளில் கம்பன் புனைகிறான். மன்மதனின் அம்பறாத்தூணி போன்ற மண்டோதரியின் கால்களை, அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலியோர் பிடித்து விட்டுக் கொண்டுள்ளனர். சிலர் வெண்சாமரம் வீசுகின்றனர். வேறு சிலர் வீணை மீட்டுகின்றனர். சிலர் கற்பகமலர்களின் மணத்தை அவள் நுகர நீட்டுகின்றனர். தென்றல், மண்டோதரி அருகிருக்கும் பெண்கள் வீசு என்று அழைத்தால் உள்ளே நுழையலாம் என்று காத்து நிற்கின்றது. அருகில் ஏற்றி வைக்கப்பட்ட இரத்தினமணி விளக்குகளின் ஒளிகளைத் தன் உடல் ஒளியால் ஒளியிழக்கச் செய்தவாறு உறங்குகிறாள் மண்டோதரி.

---

**கவிஞன் ஒரு தாய் போன்றவன். தேறும் என்று அவள் எதிர்பார்த்த பிள்ளை, தேறிவிட்டால் அவள் மகிழ்வதை விட, தேறாது என்று நினைத்த பிள்ளை தேறும்போது அவள் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. தீமையின் ஊடே நன்மையும், மறத்தின் ஊடே அறத்தினையும் காணும் போது மகிழ்வது மானுட இயல்பு. கவிஞன் மானுடத்திற்கும் மேம்பட்டவன்.**

---

அவளைக்கண்ட அனுமன் இவள் சீதையோ என எண்ணி மயங்குகின்றான். மயங்கி வெகுள்கின்றான்.

''அன்னள் ஆகிய சானகி இவள் என
ஆயிர்த்து, அகத்து எழு வெந் தீ,
துன்னும் ஆர் உயிர் உடலோடு சுடுவது ஓர்
துயர் உழந்து, இவை சொன்னான்''

வான்மிகத்தில், இராவணன் காற்கடையில், மிக உயர்ந்த படுக்கையில் மண்டோதரிப் படுத்து உறங்குவதை அனுமன் கண்டு,



www.saivamonline.com

பெருமகிழ்வு கொண்டு, பின்பு உற்று நோக்கி இவள் சீதை அல்லள் எனத் தெளிந்தான் எனக் கதை நடையிடுகிறது.

கம்பன், மண்டோதரிக்குத் தனி மாளிகை கட்டுகின்றான். சீதையோ என்ற ஐயம், இராவணன் காலடியில் உருவாவதை விட, தனியிடத்தில் உருவாவது வலியுடைத்து என எண்ணுகிறான். காப்பியத்தில் அனுமன், கவிஞனின் கருத்து வெளிப்பாட்டிற்குத் துணை நிற்பவன். கம்பன் மதிப்பீடுகள் பலவும், அனுமன் வாயிலாகவே இராமகாதையில் வெளிவரப்பெறும். கண்களால் கற்புடைமையை நுனித்து அறியும் அறிஞன் அவன்.

இராமன் சீதையின் அங்க அடையாளங்களை அனுமனிடம் விரித்துரைத்தான். அவற்றையெல்லாம் மண்டோதரியிடம் வைத்து நோக்கும் அனுமன், சீதைக்கு உரைத்த அடையாளங்கள்

---

**அனுமனுக்கு வாராத ஐயத்தை வரவழைத்து நமக்கு மண்டோதரி சீதைக்கு நிகரானவள் என்று செய்தி சொல்கின்றான். நோக்கம் வேறு உண்டு. இத்தகு அழகும், கற்புமுடையாளைத் துணையாகப் பெற்றிருந்தும், அவளை விடுத்து மாற்றான் மனைவியாகிய சீதையை நாடிய, இராவணன் சிறுமையை உணர்த்தவும் கம்பன் இதனைக் கையாளுகின்றான்.**

---

பலவற்றையும் மண்டோதரிபால் கண்டு, இவள் சீதையோ என ஐயம் கொள்கிறான். சீதைக்கு இணையான அங்க அடையாளங்கள் கொண்ட பேரழகி, கற்பரசி; உயர்குல மடந்தை இவள் என்பதைக் கற்பார்க்கு உணர்த்தக் கம்பன் செய்யும் உத்திகளில் ஒன்று இது.

அனுமனுக்கு வாராத ஐயத்தை வரவழைத்து நமக்கு மண்டோதரி சீதைக்கு நிகரானவள் என்று செய்தி சொல்கின்றான். நோக்கம் வேறுஉண்டு. இத்தகு அழகும், கற்புமுடையாளைத் துணையாகப் பெற்றிருந்தும், அவளை விடுத்து, மாற்றான் மனைவியாகிய சீதையை நாடிய இராவணன் சிறுமையை உணர்த்தவும் கம்பன் இதனைக் கையாளுகின்றான்.



www.saivamonline.com

கோபத்தோடு உற்று நோக்கியவன், உறக்கத்தில் அவள்பால் நிகழும் நிகழ்வுகள் சிலவற்றைக் காண்கின்றான்.

''அலக்கண் எய்துவது அணியது உண்டு என்று, எடுத்து
அறைகுவது, இவள் யாக்கை;
மலர்க் கருங் குழல் சோர்ந்து, வாய் வெரீஇ, சில
மாற்றங்கள் பறைகின்றாள்;
உலக்கும் இங்கு இவள் கணவனும்; அழிவும் இவ்
வியன் நகர்க்கு உளது''

---

**கணவன் பெயரை மனைவி வெளிப்பட உரைத்தல் பண்பன்று என்பது தமிழர் மரபு. கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயரே எனக் கணவன் பெயர் குறித்தாள் கண்ணகி என்பார் இளங்கோ. ''இறைவனே அஞ்சேல் இயற்பகை வெல்லும்'' என்று கணவன் பெயர் உரைத்தார் இயற்பகை நாயனார் துணைவி என்பார் சேக்கிழார். ஒன்று தெரிகிறது; கணவன் பெயரை மனைவி உச்சரிக்கலாம். ஒன்று, அவன் இறந்த பிறகு உச்சரித்தாள் கண்ணகி. துறந்த பிறகு உச்சரித்தார் இயற்பகை துணைவி. இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ என்று குறித்த மண்டோதரி, அவன் இறந்த பிறகு, ''என்னேயோ என்னேயோ இரவணனார் முடிந்த பரிசு'' எனத் தன் கணவர் பெயர் உரைத்துப் புலம்புகின்றாள்.**

---

என்றான். தீமை விரைவில் வரப்போவதை இவள் யாக்கை காட்டுகின்றது. மலர்க். கருங்குழல் சோர்கின்றது. வாய்பிதற்றி உறக்கத்தில் சில சொல்மொழிகின்றாள். இவ்வறிகுறிகள், இவள் கணவனுக்கும், இந்நகருக்கும், அழிவுவரப்போவதை உணர்த்துகின்றன என்பதை, அனுமன் உணர்கின்றான். பின், அனுமன் இராவணன் மாளிகையில் புகுகின்றான்.



www.saivamonline.com

மீண்டும் மண்டோதரியை அக்ககுமாரன் வதைப்படலத்தின் இறுதியில் கம்பன் கொண்டு வருகின்றான். அக்ககுமாரன் மண்டோதரியின் இரண்டாவது குமாரன். இந்திரசித்தனின் தம்பி. பொழில் இறுத்த அனுமனோடு போரிட்டு அக்ககுமாரன் மாள்கிறான். அவன் இறப்பு இலங்கையில் பெரும் துயர் விளைவிக்கிறது. எல்லோரும் புலம்புகின்றனர். மகனைப் பறிகொடுத்த தாய் மண்டோதரி புலம்பலைக் கடைசியாகக் கம்பன் வைக்கின்றான். செய்தி கேட்ட மண்டோதரி, மகனைத் தேடிச் சென்று கண்டு புலம்பும்போது, அருகில் நின்ற கணவன் இராவணின் கால்களில் வீழ்ந்து அழுது அரற்றுகின்றாள். கம்பன் அற்புதம் செய்யும் இடம் இது.

---

**போர்க்கள நிகழ்வுகளால் அடுத்தடுத்து அதிகாயனும், கும்பகர்ணனும் இந்திரசித்தனும் ஒவ்வொருவராக மாளமாள அளவிறந்த சோகத்தில் இராவணன் தடுமாறுகின்றான். காமம் நிறைந்த நெஞ்சில் சோகம் நிறைகிறது. அறிஞன் இராவணன், காமக்கனலைச் சோகக்கனல் சுடச்சுட அந்த மாபெரும் வெம்மைக்கு முன் காமம் புறம் காண்கின்றது. காமத்தில் தொடங்கிய போர் மானத்தில் திரும்புகின்றது. இராவணனின் மனமாற்றம் ஊருக்கும் உலகுக்கும் புலப்படாது இருக்கலாம். உயிர் கலந்த மண்டோதரிக்குப் புலனாகிவிட்டது.**

---

''கயல் மகிழ் கண் இணை கலுழி கான்று உக,
புயல் மகிழ் புரி குழல் பொடி அளாவுற,
அயன் மகன் மகன் மகன் அடியின் வீழ்ந்தனள்
மயன் மகள், வயிறு அலைத்து அலறி மாழ்கினாள்''

இராவணனை ''அயன் மகன் மகன் மகன்'' என்று கம்பன் குறிக்கின்றான். அயன் மகன் புலத்தியன், புலத்தியன் மகன் விச்சிரவசு, விச்சிரவசுவின் மகன் இராவணன்.



www.saivamonline.com

இராவணின் கால்களில் வீழ்ந்து மண்டோதரி வயிறு அலைத்து மாழ்கினாள் என்று மட்டுமே கம்பன் கூறுகின்றான். அவள் கூற்றாக ஏதும் கூறவில்லை. வார்த்தைகள் அற்ற அழுகைக்குள்ளே, ஆழ்ந்த நோக்குடைய குறிப்புகளைக் கவிஞன் பெய்கின்றான். ஏனெனில், மண்டோதரி துயர், அது வந்த காரணம், கணவன்பால் வெளிப்பட உரைக்க இயலாத ஒன்று. பாவி, உனது முறையற்ற காமத்தால் அல்லவா என் அருமை மகன் அக்ககுமாரனை இன்று நான் இழந்தேன் என்று கூறாமல் கூறும் கூற்றுக்களைக் குறிப்பில் பெய்கின்றான் கவிச்சக்கரவர்த்தி.

---

**என் கணவன் உள்ளத்திலிருந்த சீதை என்றோ எடுத்துத் தூர வீசப்பட்டாள். அவன் நெஞ்சில் காமம் குடிபெயர்ந்து வீரம் வேர்விட்டுள்ளது. ஆனால், ஐயகோ இராமபாணம் சீதை நினைவு அங்கே இருக்கும் என்று உள்ளே புகுந்து ஒவ்வோரிடமாகத் தேடி ஏமாற்றம் அடைந்துள்ளதே! இராமபாணத்திற்கா இந்தக் கதி?**

---

காப்பியங்களில் வரும் எதிர்முனைப் பாத்திரங்கள் பலவும் தீமையின் சித்திரிப்புக்களாகவே அமைகின்றன. இராவணன் மட்டும் அல்லன்; துரியோதனனும், சூரபதுமனும் கூடத் தீயவர்கள் தாம். ஆனால் ஒரு வியப்பு, இந்தத் தீயவர்களுக்கு வாய்த்த துணைவியர் பலரும் தூய கற்பரசியராகவே விளங்குகின்றனர். இராவணன் மனைவி மண்டோதரி; துரியோதனன் மனைவி பானுமதி; சூரபதுமன் மனைவி பதுமகோமளை. யாவருமே உன்னதமான பெண்மைப் படைப்புகளே. மூவருமே துயருற்றனர். கணவனை இழந்தனர். பிள்ளைகளைப் பறிகொடுத்தனர். மூவர்துயர் அளவும் ஒன்றுதாமா? அதுதான் இல்லை. மண்டோதரிக்கு உற்றதுயர் பெரிது; மிகப்பெரிது. வாய் திறந்து அரற்றவும் இயலாத கணவனின் காமம் சார்ந்தது. மானத்திற்காகப் போரிட்டான் சூரபதுமன்; மண்ணுக்காகப் போரிட்டான் துரியோதனன்; அந்தப் போராட்டத்தின் இறுதியில் தோல்வி என்றாலும், துணைவியர்க்கு ஒரு பெருமிதம் இருந்தது. ஆனால், இராவணன் போரோ, காமத்திற்காக மாற்றான் மனைவிக்காக.



www.saivamonline.com

இங்கேதான் மண்டோதரியின் துயர் அளவு இரட்டிப்பு ஆகிறது. இது பெண்மைக்கு உற்ற பெரும் சோதனை.

மீண்டும் மண்டோதரியை யுத்த காண்டத்தில் கம்பன் காட்டுகின்றான். அழுவதற்கு மட்டுமே அவள் உரியவள் போலும், மூத்த மகன் இந்திரசித்தன் இறந்தான் என்ற செய்தி கேட்டு மைந்தன் மேல் விழுந்து புலம்புகின்றாள் மண்டோதரி. அவள் சோகத்தை ஏழு விருத்தங்களில் கம்பன் பதிவு செய்கின்றான். மண்டோதரி புலம்பல் கல்லையும் கரைவிக்கும் உருக்கம் மிக்கது.

"மகனே, நீ நாள்தோறும் திங்கள் போல் வளர்ந்து வந்த காலத்தில் வில் எடுத்து சிங்கத்தை வென்ற காட்சியைக் கண்டு

---

**கணவன் வீழ்ச்சிக்குப் பல காரணங்களை அடுக்கும் மண்டோதரியின் அரற்றலுக்கு இடையே ஓர் உண்மை புலப்படவே செய்கிறது. என்ன அது? இராவணன் வீழ்ச்சிக்கு முதலும், முடிவுமான ஒரே காரணம், அவன் சீதை பால் கொண்ட காமமே. ஆனால் அன்பு மனம், கணவனைக் குறைகாண விரும்பாத கற்பு நெஞ்சம், பல காரணங்களை அடுக்கி, அவற்றுள் ஒன்றே என் தலைவனின் காமம் என அவனைக் காக்க முற்படும் அற்புதத்தைச் செய்கிறது.**

---

அன்று களித்தேனே. ஐயகோ இன்று உன் தலையிலா உடலைக்காண நான் என்ன தவம் செய்தேன் அப்பா".

"ஐயனே, அழகனே, என் அரும் பெறல் அமிழ்தே ஆழிக்
கையனே மழுவனே, என்று இவர் வலி கடந்த கால
மொய்யனே, முளரி அன்னநின் முகம் கண்டிலாதேன்
உய்வெனோ?"

மகனே, இளமைக்காலத்தில் ஒரு நாள் நீ ஒரு சிங்கக் குட்டியைப் பிடித்துக் கொண்டு முன்னே வந்தாய். சினமூட்டி ஒன்றொடு ஒன்றை மோதவிட்டாய். மீளமீள நீ ஆடிய அந்த ஆட்டத்தை



www.saivamonline.com

மகனே இனி என்று காண்பேன். ஒரு நாள் நீ வானத்து நிலவை வா என்று அழைத்தாய். அஞ்சி அம்புலி உன் கையில்வந்தது. நிலவிலிருந்த மருவைக்கண்டு, இந்தா இந்த முயலை நீக்குகின்றேன் என அதனை பற்றி இழுத்தாயே என் இளம் கதிரே உன்னைக் காணத் துடிக்கின்றேன். மீள எழுந்து வாராயோ?''

மகன் மறைவு பற்றிய சோகத்திற்குப் பின்னே பெண்மை மனம் சோகத்தின் பின் புலத்தை நினைவு கூர்கிறது. மெல்லிய சொற்களால் வெளிப்படுத்துகின்றாள் மண்டோதரி. அதில்தான் எவ்வளவு நனி நாகரிகம், முன்னை இராவணன் மகன் அதிகாயன் சாக்காட்டில் அவன்தாய் தானியமாலினி புலம்பியதைக் கம்பன் பதிவு செய்வான். பலவாறு அழுத தானிய மாலினி சோகத்தின் உச்சியில் இராவணனை நோக்கி அவன் காமத்தைச் சுட்டிக் கண்டித்து.

---

**மண்டோதரி, வீழ்ந்துபட்ட இராவணன் மார்பினைத் தன் கரங்களால் தழுவி, யாருமற்ற இடத்தில் கணவன் மட்டுமே அறிய அவள் கூறும் அந்த ஒரு சொல்லை, கூட்டக் கலப்பில், இன்ப உச்சத்தில் சொல்லப்படும் அந்த ஒரு சொல்லைக் கூறி அன்பனை அழைத்தாள். அவள் ஆவி நீங்கிற்று எனக் கம்பன் நிறைவிக்கிறான்.**

---

''ஏது ஐயா சிந்தித்து இருக்கின்றாய், எண் இறந்த
கோதை ஆர் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ?
பேதை ஆய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ?
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ?

எனச் சீறுவாள். ஆனால் அதே போன்று சோகத்தின் உச்சியில் மண்டோதரியிடம் கணவனைக் கண்டிக்கும், அவன் காமத்தைச் சாடும் பண்பு காணப்படவில்லை. ஆனால் ஓர் உண்மை. வரப்போகும் துயரத்தைக் கற்பு மனம் கணித்துக் காட்டுகிறது.

''பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ் சின மனிதர் கொல்ல, விளிந்ததே, மீண்டது இல்லை



www.saivamonline.com

அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?''

மகன் இறப்புக்குக் கணவனே காரணம் என்பதைத் தாய் மனம் உணர்கிறது. என்றாலும், இன்று மகனுக்கு நேர்ந்தது நாளை கணவனுக்கும் நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் விரிகிறது. கற்பின் வீச்சுக்குக் கம்பன் காட்டும் உன்னத அடையாளம் ஈது. தானிய மாலினி, மகன் பிரிவில் கணவனைச் சாடுகிறாள். மண்டோதரியோ, நாளை நிகழப்போகும் சோகத்தை நினைவு கூர்ந்து கற்பில் தலைநிற்கிறாள். ''சீதை என்று அமுதால் செய்த நஞ்சு'' என்று முதல் முதல் அவள் வாய் சீதையின் திருப்பெயரை உச்சரிக்கின்றது. மண்டோதரியின் மாண்பு நம் நெஞ்சத்தை நெகிழ்விக்கின்றது.

---

**கணவன் உடலோடு உடல் சேர்ந்து ஆவி பிரிந்த தனி அன்பில் மண்டோதரி மரணத்தையும் ஆட்சி செய்கிறாள். ஒரு நீண்ட இனம்புரியாத சோகம் நம்மைக் கப்பிக்கொள்ளுகிறது. அவளுக்காக நாமும் அழத் தொடங்குகின்றோம். பன்னலக் கற்பில் மண்டோதரி என்னும் மாண்புறுநங்கை அமரத்தன்மை பெறுகின்றாள்.**

---

சோமகுண்டம், சூரியகுண்டத்தில் மூழ்கி, காமவேளை வழிபட்டால் பிரிந்த கணவனைக் கூடலாம்; வா நீராடலாம் என்று அழைத்த தோழி தேவந்தியை நோக்கிக் கண்ணகி பீடன்று என மொழிந்ததை இளங்கோ பேசுவார். கடவுளுக்கு முன்னின்று கூட, கணவன் குறைகளை இயம்புவது கற்புடைய பெண்ணுக்குப் பெருமை அன்று என்று கருதினாள் என்பர். இங்கே மண்டோதரியிடம் பெண்மைப் பண்பு பேரழகு பெறுவதைக் காண்கின்றோம்.

கற்பரசிகளின் கணிப்புகள் தவறுவதில்லை. அவள் நினைந்தவாறு ஒருநாள் இராவணன் மாண்டான் என்ற பேரிடி, செய்தியாக வந்தது. இராவணன் உயிர் துறந்து கிடக்கும் படுகளத்திற்கு அவள் வருகிறாள். கம்பன் செய்தியாகக் கூறும்போது.



www.saivamonline.com

"இனம் தொடர்ந்து உடன்வர, எய்தினாள் என்ப
நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்".

தன் கணவனை அவள் நினைத்ததே இல்லை. ஏன் தெரியுமா? அவள் மறந்தால்தானே நினைக்க என்கின்றான் கம்பன். அவளோ அவனே நினைவாக வாழ்கின்றாள். அவனோ சீதையே நினைவாக வாழ்கின்றான். இராவணன் மார்புமீது வீழ்ந்து மண்டோதரி புலம்புகிறாள். காவியத்தில் கனம் நிறைந்த சோகம் கொட்டிக் கிடக்கும் கம்பன் கவிதைகள் நீளுகின்றன. மரங்களும், மலைகளும் உருக வாய்திறந்து இரங்கினாள் மயன் மகள் என்பான் கம்பன். உயிரற்ற மலைகளும், சிற்றறிவு படைத்த மரங்களுமே அவள் துயர் கண்டு இரங்கின எனின் ஏனை மாந்தர் துயரை என்னென்பது என நம்மைக் கம்பன் வினவும் இடம் இது.

---

**மண்டோதரி இராவணனை வெறுத்தொதுக்க ஆயிரம் காரணங்கள் உண்டு. ஆனால், அவற்றுள் ஒன்றையும் சிந்தை செய்தவள் அல்லள். மரணத்தில் மனிதனின் தவறுகள் தெரிவதில்லை. பிறருக்குத் தெரிந்தாலும், கற்புடைய மனைவிக்குத் தெரிவதில்லை. மண்டோதரி என்னும் மாண்புறு நங்கையின் பிறப்பு, வளர்ப்பு, மண வாழ்வு இவற்றுள் ஒன்றையும் காப்பியம் நமக்குக் காட்டவில்லை.**

---

மண்டோதரியின் புலம்பலை ஏழு பாடல்களில் கம்பன் பதிவு செய்கிறான். அவற்றில் ஒவ்வொன்றும் ஆயிரம் பொருள் பொதிவு கொண்ட அவலம் நிறைந்தன. கணவன் பெயரை மனைவி வெளிப்பட உரைத்தல் பண்பன்று என்பது தமிழர் மரபு. கோவலன் மனைவி கண்ணகி என்பது என்பெயரே எனக் கணவன் பெயர் குறித்தாள் கண்ணகி என்பார் இளங்கோ. "இறைவனே அஞ்சேல் இயற்பகை வெல்லும்" என்று கணவன் பெயர் உரைத்தார் இயற்பகை நாயனார் துணைவி என்பார் சேக்கிழார். ஒன்று தெரிகிறது கணவன் பெயரை மனைவி உச்சரிக்கலாம்.



www.saivamonline.com

அவன் இறந்த பிறகு உச்சரித்தாள் கண்ணகி. துறந்த பிறகு உச்சரித்தார் இயற்பகை துணைவி. இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ என்று குறித்த மண்டோதரி, அவன் இறந்த பிறகு ''என்னேயோ என்னேயோ இராவணனார் முடிந்தபரிசு'' எனத் தன் கணவன் பெயர் உரைத்துப் புலம்புகின்றாள்.

கணவனுக்கு முன்னாகப் பூவொடும் பொட்டொடும் இறக்க விரும்புவது இந்தியப் பெண்களின் தலையாய விருப்பம். மண்டோதரியும் அதனையே நினைத்திருந்தாள். ஆனால் இவ்வளவு விரைவில் இராவணன் வீழ்வான் என்று அவள் நினைத்தாள் இல்லை. நினையாத ஒன்று நிகழ்வதுதானே உலக இயல்பு. மண்டோதரி அரற்றுகின்றாள்.

''அன்னேயோ, அன்னேயோ ஆ, கொடியேற்கு
அடுத்தவாறு, அரக்கர் வேந்தன்
பின்னேயோ, இறப்பது? முன் பிடித்திருந்த
கருத்து அதுவும் பிடித்திலேனோ?''

தன் எண்ணம் பொய்த்தது. ஏமாற்றத்தோடு இராமன் வில் அம்புகளால் துளைபட்டுப் பொடியாடி வீழ்ந்து கிடக்கும் தன் கணவனின் திருமேனியைக் காணுகின்றாள். மனைவியை விட ஓர் ஆண் மகனைச் சரியாக எவரால் மதிப்பிட முடியும்? இராவணனை மற்ற எல்லாரையும் விட நன்கு அறிந்தவள் மண்டோதரி. மாற்றான் மனைவியை இதயமாம் சிறையில் வைத்தவன் கணவன் என்று அவள் அறிவாள். இக்காமம் பற்றி எழுந்த போரில் தன் கணவன் முதல் நாள் அவமானப் பட்டுத் தனியனானதும் அவளுக்குத் தெரியும். அப்போது கூட, சானகி நகுவள் என அவன் மானத்தால் சாம்பியதை அவள் உள் உணர்வு எடை போட்டிருக்கும். காமத்தில் கிளைத்த போர் அது. எவர் சொல்லையும் கேளாது எனனையே நோக்கி நான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன் என்ற இராவணனின் வீரம் அவள் அறியாததன்று. ஆனால் போர்க்கள நிகழ்வுகளால் அடுத்தடுத்து அதிகாயனும், கும்பகருணனும், இந்திரசித்தனும் ஒவ்வொருவராக மாளமாள அளவிறந்த சோகத்தில் இராவணன் தடுமாறுகின்றான். காமம் நிறைந்திருந்த நெஞ்சில் சோகம் நிறைகிறது. அறிஞன் இராவணன், காமக்கனலைச் சோகக்கனல் சுடச்சுட அந்த மாபெரும்



www.saivamonline.com

வெம்மைக்கு முன் காமம் புறம் காண்கின்றது. காமத்தில் தொடங்கிய போர், மானத்தில் திரும்புகின்றது. இராவணனின் மனமாற்றம் ஊருக்கும் உலகுக்கும் புலப்படாது இருக்கலாம். உயிர் கலந்த மண்டோதரிக்குப் புலனாகிவிட்டது. அவள் தெளிவாக அதனைத் தெரிந்து கொண்டுவிட்டாள். கணவனின் சிறு அசைவுகளில் கூட அவன் உளப்போக்கை அறியும் ஆற்றல் சராசரி பெண்களுக்கே உண்டு என்றால், சீதைக்கு நிகரான கற்பரசி மண்டோதரிக்கு, இராவணன் மனமாற்றம் தெரிய வந்ததில் வியப்பு என்ன உண்டு. பெண்மை சோகத்தின் விளிம்பில் வெளிப்படுத்தும் உண்மைகள் பெரிது, நேரிது.

இராமன் இராவணன் மீது அம்பெய்து அவன் உயிரை மாய்த்திட்டான். ஆனால் மண்டோதரி இராமபாணம் இராவணன் மார்பில் பாய்ந்ததற்கு வேறு காரணம் கற்பிக்கின்றாள். தன் துணைவியை அசோகவனத்திலிருந்து விடுவிப்பது மட்டுமா இராமனின் நோக்கம்? அன்று தன் மனையாள் பற்றிய காதல் எண்ணத்தை இராவணன் எந்த நெஞ்சத்தில் மறைத்து வைத்தானோ அந்த எண்ணச் சிறையிலிருந்தும் இராமன் அவளை விடுவிக்கவே விரும்பினான். அவன் இராமபாணத்தை இராவணன் மேல் ஏவியதும் அதற்காகத்தானாம். மண்டோதரியின் அழுகுரல் ஊடே எழும் நுட்பமான வார்த்தைகளில் இராவணனின் தூய்மையும், இராமபாணம் ஏமாற்றம் உற்றதும் அழகுற வெளிப்படுகின்றன. இதனை நுனித்து அறியவல்லார் மட்டுமே உணர இயலும். இராவணன் மனச்சிறையில் சீதை இருக்கின்றாள் என்று இராமன் திடமாக நம்புகின்றான். அம்பு விடுகின்றான். அதுவும் மார்பை ஊடுருவிச் செல்கின்றது. மண்டோதரி நினைக்கின்றாள். என் கணவன் உள்ளத்திலிருந்த சீதை என்றோ எடுத்துத் தூர வீசப்பட்டாள். அவன் நெஞ்சில் காமம் குடிபெயர்ந்து வீரம் வேர்விட்டுள்ளது. ஆனால், ஐயகோ இராமபாணம் சீதை நினைவு அங்கே இருக்கும் என்று உள்ளே புகுந்து ஒவ்வோரிடமாகத் தேடி ஏமாற்றம் அடைந்துள்ளதே. இராமபாணத்திற்கா இந்தக் கதி? அழுகையின் ஊடே கணவனின் நெஞ்சறிந்து போற்றும் கற்பின் திறத்தைக் கம்பன் சாறு பிழிந்து காட்டுகின்றான்.



www.saivamonline.com

''வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பெடுத்த
திரு மேனி மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடம் நாடி, இழைத்தவாறோ?
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?''

உள்ளிருக்கும் எனக் கருதி என்ற தொடரில் காமம் என் கணவன் உள்ளத்தே இல்லை என்ற உறுதி வெளிப்படக் காண்கிறோம். சீதையைக் ''கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகி'' என அடைமொழி சேர்த்து அரற்றுவதில், அம்மலரை நான் இழந்தேனே என்ற ஏக்கம் தொனிக்கிறது.

பொதுவாக, மனித உடலை ''மெய்'' என்றே அழைப்பது மரபு. மனித வடிவில் அமைந்த ஒன்றை ''உருவம்'' என்றே கூறுவர். கடவுள் வடிவை மட்டுமே ''திருமேனி'' என்று குறித்தல் தமிழர்மரபு. கம்பன், இராவணின் வீழ்ந்து கிடக்கும் உடலைத் ''திருமேனி'' என்று கூறக் காண்கிறோம். ஆம், மண்டோதரி அறிவள், ''மனத்தூய்மையோடு என் கணவன் மரணத்தைத் தழுவினான். அவன் உடல் வணங்கத்தக்க திருமேனி ஆயிற்று'' என்ற அவள் அரற்றலில் இராவணன் கற்பார் நெஞ்சில் ஒரு படி உயர்கின்றான்.

கம்பன் கைவண்ணத்தில் மண்டோதரி புலம்பலாக வரும் ''காந்தையருக்கு அணி அனைய'' என்ற பாடல், பேரழகு பெற்று விளங்குகின்றது. கவிதை அழகெல்லாம் நிறைந்த உன்னதப் பாடல் அது. மண்டோதரியின் மனப்பண்பை அது அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இந்திரன் தவம் செய்தான், எதற்காக? அரக்கரை அழித்து அமரரை வாழ்விக்க; அவன் தவம் வென்றதா? ஆம், வென்றது. எப்போது? இராவணன் வீழ்ச்சியில்; முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் உடைய இராவணனுக்கு வீழ்ச்சி யாரால் வந்தது? கற்புமனம், காரணங்களைச் சோகத்திலும் நிலை தடுமாறாமல் கணித்து உரைக்கிறது.



www.saivamonline.com

இராவணன் வீழ்ச்சிக்கு முதற்காரணம், சீதையில் பேரழகு, அழகுக்கு அழிக்கும் திறம் உண்டா? அழகு மட்டும் காரணம் அன்று; அவள் கற்பும் ஒரு காரணம், மூன்றாவதாக இராவணனார் சீதைபால் கொண்ட காதல்; இராவணன் கொண்டது காமம்தான்; ஆனால், மண்டோதரியின் கணவனைக்குறை காணாத நெஞ்சம், காமத்தையும் காதல் என்று நாகரிகப்படுத்துகின்றது. அடுத்த காரணம், நாத்தி சூர்ப்பணகை. சூர்ப்பணகை என மட்டும் கூறாது ''அவள் இழந்த மூக்கும்'' என்கிறாள் மண்டோதரி. சூர்ப்பணகையின் மூக்குமட்டும் அரியப் பெறாதிருந்தால், அவள் இராவணனை நாடி முறையிட வந்திருக்கமாட்டாள். எனவே இலக்குவன் செயல்கூட சூர்ப்பணகை வடிவில் இராவண வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்கிறது காதல் நெஞ்சம்.

வேந்தூர் தலைவனாகிய இராமன், தயரதன் கட்டளையால், காடு போந்ததும் ஒரு காரணம் என்கிறாள் அவள். கணவன் வீழ்ச்சிக்குப் பலகாரணங்களை அடுக்கும் மண்டோதரியின் அரற்றுலுக்கு இடையே ஓர் உண்மை புலப்படவேசெய்கிறது. என்ன அது? இராவணன் வீழ்ச்சிக்கு முதலும், முடிவுமான ஒரே காரணம், அவன் சீதை பால் கொண்ட காமமே. ஆனால் அன்பு மனம், கணவனைக் குறைகாண விரும்பாத கற்புநெஞ்சம், பல காரணங்களை அடுக்கி, அவற்றுள் ஒன்றே என் தலைவனின் காமம் என அவனைக் காக்க முற்படும் அற்புதத்தைச் செய்கிறது.

''காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேர் அழகும், அவர்தம் கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான், தயரதனார் பணியதனால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்தவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா''

மண்டோதரியின் பெண்மைப்பண்பால், இராமன் என்ற பெயர் சுட்டாது, ''ஒருவன்'' என்றும், ''மானுடவன்'' என்றும், ''வேந்தர் பிரான்'' என்றும், ''மனிதனார்'' என்றும் கூறப்படும் அருமைப்பாடு கம்பசித்திரத்திற்கு அழகு சேர்க்கிறது.



www.saivamonline.com

மண்டோதரியின் அழுகையைக் கூட, பலபடப் புனையும் கம்பன், அவற்றில் எல்லாம் அவள் கற்பின் மாட்சியைக் காட்டுகிறான்.

''... நீ உழந்த அருந்தவத்தின்
பெருங் கடற்கும் வரம் என்று ஆன்ற
காவற்கும், வலியான் ஓர் மானுடவன்
உளன் என்னக் கருதினேனே''

என்ற அவள் அரற்றலும்,

''திரை கடையிட்டு அளப்பரிய வரம் என்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரை கடையிட்டு அழிப்பதனை அறிந்தேனோ
தவப்பயனின் பெருமை பார்ப்பேன்''

என்ற அவள் மனக் குமுறல்களும்,

''நார நாள்மலர்க் கணையால், நாள் எல்லாம்
தோள்எல்லாம் நைய எய்யும்
மாரனார் தனிஇலக்கை மனித்தனார்
அழித்தனரே வரத்தினாலே''

என்ற அவள்நிலை குலைவும் கம்பனில் மறக்க இயலாத துன்பியல் ஓவியங்களாக அமைகின்றன.

இவ்வாறு, பலபட அழுது அ்ரற்றிய மண்டோதரி, வீழ்ந்து பட்ட இராவணன் மார்பினைத் தன் கரங்களால் தழுவி யாருமற்ற இடத்தில், கணவன் மட்டுமே அறிய அவள் கூறும் அந்த ஒரு சொல்லை, கூட்டக் கலப்பில் இன்ப உச்சத்தில் சொல்லப்படும் அந்த ஒரு சொல்லைக் கூறி அன்பனை அழைத்தாள். அவள் ஆவி நீங்கிற்று எனக் கம்பன் நிறைவிக்கிறான்.

''என்று அழைத்தனள் ஏங்கி எழுந்து அவன்
பொன் தழைத்த பொருஅரு மார்பினைத்
தன்தழைக் கைகளால் தழுவி தனி
நின்று அழைத்து உயிர்த்தாள் உயிர் நீங்கினாள்''



www.saivamonline.com

கணவன் உடலோடு உடல் சேர்த்து ஆவி பிரிந்த தனி அன்பில் மண்டோதரி, மரணத்தையும் ஆட்சி செய்கிறாள். ஒரு நீண்ட இனம்புரியாத சோகம் நம்மைக் கப்பிக்கொள்ளுகிறது. அவளுக்காக நாமும் அழத்தொடங்குகின்றோம். பன்னலக் கற்பில் மண்டோதரி என்னும் மாண்புறுநங்கை அமரத்தன்மை பெறுகின்றாள்.

அன்பு என்பதற்கு இலக்கணம் கூற வந்த இறையனார் களவியல் உரைகாரர், நக்கீரர், அது, சாவிற் சாதல், நோவில் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி இரங்கல் இவற்றால் அறியப்படும் என்பார். அன்பின் விரிவே காதல். கணவன் சாவில் சாதல் உன்னதமானதுதான். மரணம் அன்பில் விளைதல் வேண்டும். தானே அமைய வேண்டும்; தீக் குளித்தலோ, தற்கொலை செய்து கொள்ளுதலோ உண்மை அன்பின் வெளிப்பாடுகளாகிவிட முடியாது. மண்டோதரி மரணம் கணவனோடு அமைகிறது. அவன் மேனி தழுவி உயிர்க்க, அவள் ஆவி பிரிகிறது. இது, அவள் கற்பு நிலையின் உன்னதம் காட்டுகிறது.

அன்பின் வெளிப்பாடு சாதலில் உண்டு என்றாலும், உடன் உயிர் துறவாமை குற்றமாகி விடாது. ''கள்வன்'' என்ற குறை நீக்கவேண்டி, சிலநாள் உயிர்வாழ்ந்து, பாண்டியனோடு வாதிட்டு, கணவன் பழிதுடைத்துமாளும் கண்ணகியும் கற்பரசியே. கோவலன் மரணத்திற்குப்பின், மக்கள் மணிமேகலையின் வாழ்வு கருதி அவளைப் பௌத்த மதத்தில் சேர்ப்பித்துத் தானும் துறந்த மாதவியும் கற்பரசியே. ''தகைசான்ற சொற்கா''க்கும் பெண்மைப் பண்பு இவர்களிடையே சிறந்திலங்கக் காண்கிறோம்.

சிலம்பில் பாண்டிமாதேவியும் உயிர் துறக்கக்காண்கிறோம். தவறே செய்யாத கணவன், விதி வயத்தால் தவறியபோது, நேர்ந்த மரணம் பாண்டிய மன்னனுடையது. இராவணன் அப்படிப்பட்டவன் அல்லன். அவன் திட்டமிட்டுத் தவறு செய்தவன். பலர் எடுத்துரைத்தும் திருந்த முற்படாதவன். பலரை அடுத்தடுத்துப் பறி கொடுத்தும் நீதி சேராதவன். சொல்லப்போனால் மனைவி இடத்தில் மாற்றாள் ஒருத்தியை இருத்திப் பார்த்தவன்.



www.saivamonline.com

மண்டோதரி இராவணனை வெறுத்தொதுக்க ஆயிரம் காரணங்கள் உண்டு. ஆனால், அவற்றுள் அவள் ஒன்றையும் சிந்தை செய்தவள் அல்லள். மரணத்தில் மனிதனின் தவறுகள் தெரிவதில்லை. பிறருக்குத் தெரிந்தாலும், கற்புடைய மனைவிக்குத் தெரிவதில்லை. மண்டோதரி என்னும் மாண்புறு நங்கையின் பிறப்பு, வளர்ப்பு, மணம் வாழ்வு இவற்றுள் ஒன்றையும் காப்பியம் நமக்குக் காட்டவில்லை. சோகங்களில் மட்டுமே அவள் நிழலாடுகிறாள். இழப்புக்களில் மட்டுமே அவள் இனங்காட்டப்படுகிறாள். அவள் இடம் பெறும் காட்சிகளோ மிகச்சில. கம்பனின் பாடல்களோ வெகுசில. சிலவாய பாடல்களிலேயே மண்டோதரி கற்பார்மனத்தில் நிற்கிறாள். சோகத்திலும் பண்பு தவறாத அவள் பண்பும், குறையுடையவன் மாட்டும் மனம் மாறா அன்பு செய்யும் சால்பும், மரணத்தை வா என்று அழைத்து ஆட்சி கொள்ளும் உன்னதமும் மறக்க வியலாத மாபெரும் பாத்திரமாக அவளை உயர்த்தி விடுகின்றன.

www.saivamonline.com